
# கலைக்கதிர்

பெருந்தலைவர்க்கு அஞ்சலி — நவம்பர்-1975




தோற்றம்: 15—7—1903 — மறைவு: 2—10—1975



லால்பகதூர் சாஸ்திரியுடன் பாரதப் பெருந்தலைவர் காமராஜ்

# தியாகச்சுடர்


## பேராசிரியர் திரு. ஜி. ஆர். தாமோதரன்

''மதிப்பிற்குரிய **திரு. காமராஜ்** அவர்கள் இளைஞர் உலகை நெறிப்படுத்தி, அமைதியான முறையில் சமூக, பொருளாதாரப் புரட்சி காண தந்நலம் கருதாது உழைத்து மக்கள் மனங்கவர்ந்த சிறந்த தலைவர்களுள் தலைசிறந்து விளங்கியவர்; தலைமைப் பண்பும், சிறந்த ஆளுமையும் நிறைந்தவர்; தமிழ் நாட்டு மக்களின் நலம் மட்டும் அன்றி இந்திய நாட்டு மக்கள் அனைவரும் நலமும் இன்பமும் அமைதியும் நிறைந்த வாழ்வு வாழ வேண்டும் என்று எண்ணியும் பேசியும் செயலில் காட்டியும் வாழ்ந்தவர்; மிகவும் சிக்கலான செய்திகளையும் தெளிவாகச் சிந்தித்து மக்கட்குப் புரியுமாறு சொல்லி வந்த சொல்லின் செல்வர்; இந்திய நாட்டுக் கல்வி, பொருளாதாரம், சமூகம் ஆகியவை காந்தியடிகள் காட்டிய வழிகளில் அமைந்து வளர்ந்தால்தான் மக்கள் வாழ்வில் இன்பமும் அமைதியும் நிலைக்கும் என உறுதியாக நம்பி உணர்த்திவந்த காந்தீயவாதி; இந்திய நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டு ஆங்கில ஏகாதிபத்தியம் தந்த அடிக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகிய அரிய தியாகி; சுதந்திரப் போரில் 8 ஆண்டுகள் சிறையில் கழித்த தீரர்; ஆழ்ந்த அறிவும், நாட்டுப் பற்றும் கொண்ட நல்லார். எளிமையை ஏற்றுத் தந்நலம் மறந்து வாழ்ந்த தகைமையாளர்; தமிழ் நாட்டின் தொழில், சமூக, கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக வாழ்ந்த பெரியார்; கருத்து வேறுபாடு கொண்டோராலும் மதிக்கப்பெற்ற மாண்பாளர்; மக்களின் அன்பு அன்றித் தமக்கென வேறு ஒன்றையும் சேர்த்து வைக்காத **தியாகச் சுடர்**.

இத்தகைய சிறந்த பண்பாளராகிய **கர்மவீரர் திரு. கு. காமராஜ்** அவர்கள் இறைவனடி எய்தியமை நாட்டிற்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும். அவர்தம் ஆன்மசாந்திக்கு ஆண்டவனை வேண்டுவோமாக!''

---

**செய்தித் தாள்கட்கும், வானொலிக்கும் அளித்த செய்தி**



# பாரதப் பெருந்தலைவர்

உயர்ந்தவர்கள் ஒரு சிலரின் தியாகங்களினுலேயே நம் மனித சமுதாயம் நிலைத்து வாழ்கிறது. அவர்கள் தமக்காக உழைக்காமல் நாட்டிற்கும் சமுதாயத்திற்குமே பாடுபடுகிருர்கள். அவற்றின் நலத்தையே தம் நலமாகக் கொள்கிருர்கள். இந்த உணர்வோ தம் வாழ்நாளெல்லாம் நம் நாட்டிற்கும்

சமுதாயத்திற்கும் இடையருமல் உழைத்து இணையற்ற தியாக ஒளியாக விளங்கினுர் தலைவர் காமராஜர். அவர் ஆற்றிய தொண்டுகளையும், அரும்பெரும் செயல்களையும் நினைக்கும்போதெல்லாம் அவருடைய பெருமை இமய மலையிலும் பெரிதாகத் தோன்றுகிறது.

## தியாகத்தின் திருவுருவம்

காமராஜர் தியாகத்தின் திருவுருவாகவே விளங்கினுர். தியாக உணர்வு தம் இளம் பருவத்திலேயே அவரிடம் அரும்பியது. நம் நாட்டை நாமே ஆளும் நிலை ஏற்பட்டாலன்றி ஏழை மக்கள் வாழமுடியாது என்பதைக் காந்தியடிகள் உணர்ந்து விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கினுர். அப்போராட்டத்தை நடத்திய காங்கிரஸ் கட்சியில் தொண்டராகச் சேர்ந்தார். நாட்டுப்பற்று அவரிடம் சுடர்விட்டு விளங்கியது. காங்கிரஸ் தொண்டராகவே பல ஆண்டுகள் பணியாற்றிப் பல அரிய தியாகங்களைப் புரிந்தார். விடுதலை இயக்கங்களில் ஈடுபட்டதன் விளைவாக மொத்தம் எட்டு ஆண்டுகள் அவர் சிறையில் வாட நேர்ந்தது. முதலில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் செயலாளராகவும், நான்கு ஆண்டுகள் கழித்து அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று அவர் ஆற்றிய தேசியப் பணிகள் மிகப்பல.

## நாட்டு நலனில் நாட்டம்

நம்நாடு விடுதலை பெற்ற பிறகு நாட்டின் விடுதலை நிலைக்கவும் நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழவும் ஓயாது பாடு பட்டார். ''நாம் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டால் மட்டும் போதாது. சுதந்திர நாட்டில் வாழக் கூடிய மரியாதையும் நமக்கு வேண்டும். நாட்டில் மக்கள் நல்வாழ்வு வாழுகின்றுர்கள் என்ற நிலைமை இருந்தால்தான் சுதந்திர நாட்டில் வாழ்க்கை நடத்தக்கூடிய பெருமையும்,

கௌரவமும் மரியாதையும் இருக்கும். அப்போதுதான் நாட்டின்மேல் அதிகப் பற்றும் இருக்கமுடியும். வளமான நல் வாழ்வுக்கு நாம் வழிகள் செய்ய வேண்டுமென அவர் கூறிவந்தார். நாட்டில் வறுமையும் அறியாமையும் நீங்கிஞலன்றி நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழமுடியாதென்பதை நன்கு உணர்ந்திருந்தார் அவர். வறுமை ஒழிவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் முழுமூச்சுடன் உழைத்திடல் வேண்டும். அவ்வாறு உழைப்பதன் பயனுக நாட்டில் பெரும் செல்வம் எல்லோர்க்கும் சரிசமமாகப் போய்ச் சேர வேண்டும் என்று அவர் கருதினுர்.

''வறுமையைப் போக்கச் சரியான வழி கண்டுபிடிக்காவிட்டால் நாட்டில் உற்பத்தியாகும் செல்வம் எங்கோ போய்க் குவிந்துவிடும். மழைத் தண்ணீர் யாருக்கும் பயன் தராதது போல் யார் பெட்டியிலோ போய் விழுந்துவிடும். 'பெட்டியிலிருக்கும் பணத்தை எடு' என்று மக்கள் கூறும் நிலை வந்துவிடும். அதற்கு முன்னதாகவே சரியான முறையில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்''—இவ்வாறு அவருடைய இலட்சியமாகிய சமதர்மத்தினை விளக்கியுள்ளார்.

## காமராஜர் சகாப்தம்

நம் நாடு விடுதலை பெற்றபிறகு நாட்டின் விடுதலை நிலைக்கவும் நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழவும் ஓயாது பாடுபட்டார். 1954-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 10 ஆண்டுகள் தமிழ்நாடு முதல் அமைச்சராகப் பதவியேற்றுப் பல அரிய சாதனைகளைப் புரிந்தார். மற்ற மாநிலங்களில் கட்சிப் பூசல்களும் குழப்பங்களும் தாண்டவமாடியபோது தமிழ்நாடு அவருடைய தலைமையில் பல துறைகளில் அமைதியாக முன்னேற்றம் கண்டது.

இராஜாஜியின் குலதர்மக் கல்வித் திட்டத்தை மாற்றி எல்லோரும் எல்லாவிதமான கல்வியும் பெற வழி வகுத்தார். அதன் பயனுய்த் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பள்ளிகள், பொறியியற் கல்லூரிகள் ஆகியவை பல மடங்காகப் பெருகின. பள்ளிச் சீரமைப்பு, சீருடை, மதிய உணவு முதலிய திட்டங்கள் தீட்டப்பெற்று ஊக்கமுடன் நிறைவேற்றப்பட்டன. அணைகள், நீர்ப்பாசன வசதிகள் புதிய விவசாய முறைகள் ஆகியவைகளினுல் விளைச்சல் மிகுவிக்கப்பட்டது. சிறு தொழில்களும் பெருந் தொழில்களும் வளர்ந்து தொழில் துறை முன்னேற்றம் அடைந்து வேலை வாய்ப்பு வசதிகள் பெருகின. மின் வசதி வளர்ந்தது. இவ்வாறு தமிழ்நாடு பலதுறைகளில் முன்னேறி மற்ற மாநிலங்களுக்கு முன்னேடியாக விளங்கியதால் அவர் முதல் அமைச்சராக இருந்த 10 ஆண்டுகளும் 'காமராஜர் சகாப்தம்' என்று போற்றப்பட்டது.

## ஏழைகளிடத்தில் பேரிரக்கம்

ஏழைகளிடத்தில் அறிவு இருந்தும் அதை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு வசதி இல்லாமலிருப்பதைக் குறித்துக் காமராஜர் பெரிதும் இரக்கங்கொண்டார்.

''ஏழைப் பிள்ளைகளிடம் உள்ள அறிவை வளர்த்துப் பிரகாசமடையச் செய்யவேண்டிய பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது...சம்பளமில்லாமல் படிக்க அழைத்தாலும் ஏழைகளால் படிக்க வரமுடியவில்லை. பள்ளிக்கு வரவேண்டுமானுல் அவர்களுக்கு உடுத்த நல்ல துணி வாங்கவேண்டியதாயிருக்கிறது.

''ஆனுல் மண்வெட்டும் வேலைக்குக் கோவணம் கட்டிக்கொண்டு போனுல் போதும். பள்ளிக்குப் போவதென்ருல்

தலைக்கு எண்ணெய் வேண்டும். புத்தகம் வாங்கவேண்டும் நல்ல துணி வேண்டும். இவர்களுக்கு யார் கடன் கொடுப்பார்கள்? சொத்தும் இல்லை! படிக்க வசதியும் இல்லை!'' —

இச்சொற்களில் காமராஜர் ஏழைகளுக்காகக் கசிந்துருகும் தன்மையைக் காண்கிறோம்.

## கல்வி பெருகவேண்டுமென்ற ஆர்வம்

நம் நாட்டில் பள்ளிகளும் கல்லூரிகளும் எங்கும் பெருகி, நாட்டு மக்கள் அனைவரும் சிறந்த கல்வி பெற்றவர்களாக விளங்கவேண்டும் என்று காமராஜர் விழைந்தார். அனைவரும் படித்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு, நாட்டில் கிளர்ச்சிகள் ஏற்படும் என்று சிலர் அஞ்சியதைக் குறிப்பிட்டு அவர், ''கிளர்ச்சி ஏற்படும் என்று மக்கள் அறிவு பெறாமல் செய்ய வேண்டுமா? படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பார்களானால் அதற்காகக் கவலைப்படவேண்டாம் அப்படியே நிரந்தரமாக இருக்கமாட்டோம். இன்னும் தொழில் துறைகள் பெருகிக்கொண்டிருக்கும். பல்வேறு துறைகளிலே முன்னேற்றம் அடையப்போகிறோம். அதற்கு நாம் படித்துக்கொள்ள வேண்டாமா ?'' என்று இத்தகைய அச்சம் பொருளற்றது என்பதை நன்கு தெளிவுபடுத்தினார்.

## கற்றோருக்கு உணர்த்தல்

நம் நாட்டில் கற்றவர்கள் உடல் உழைப்புக்கு மதிப்புத் தராத நிலையை எண்ணிக் காமராஜர் உள்ளம் வருந்தியது. கற்றவர்கள் உடல் உழைப்புக்கு மதிப்புத் தந்தால்தான் உழைப்பாளி ஊக்கத்தோடு உழைப்பான் என்ற உண்மையை அவர் அறிவுறுத்தினார்.

''உழைத்துப் பிழைப்பவனைக் கூலிக்காரன் என்கிறது நாடு. ஒரு வேலையும் செய்யாமல் காரில் சோம்பேறியாய்ச் சுற்று

பவர்களை முதலாளி என்கிறார்கள். அதனால்தான் உழைப்பாளி கூடத் தன் பிள்ளையாவது சொகுசாக வாழவேண்டும் என்று நினைத்து, உடல் உழைப்பின் பெருமையை அவனுக்கு உணர்த்தாமல் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு அனுப்ப ஆசைப்படுகிறான். இது ஏழையின் தவறல்ல. உடல் உழைப்பு மதிக்கத்தகுந்தது என்பதைப் படித்தவர்கள் உணரவேண்டும்'' என்று அவர் கூறியுள்ளார்.

## காமராஜர் திட்டம்

பெருங்காங்கிரஸ் தலைவர்கள் பலர் அரசியல் பதவியில் இருந்தமையால் பொதுமக்களோடு காங்கிரஸ் கட்சியின் தொடர்பு சற்றுக் குறையலாயிற்று. இதனை உணர்ந்த காமராஜர் அரசியல் பதவிகளில் இருக்கும் மூத்த தலைவர்கள் கட்சித் தொண்டில் தீவிரமாக ஈடுபடுவதற்கென ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். நம் நாட்டு அரசியல் வரலாற்றில் இது காமராஜர் திட்டமென இடம்பெற்றது. இத்திட்டத்தின்படி காமராஜர் முதலமைச்சர் பதவியினின்று விலகினார்.

''பெருந்தலைவர்கள் பதவியில் இருந்தால்தான் நாம் திறமையாகச் செயலாற்ற முடியும் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. மந்திரிப் பதவியை விடவேண்டும் என்றால் பொறுப்பைத் தட்டிக் கழித்து ஓடுவதல்ல...........பதவியிலுள்ள ஒருவர் எவ்வளவு செல்வாக்கு உடையவராய் இருந்தாலும் நிர்வாகத்திலும் கட்சியிலும் ஏககாலத்தில் திறமையாகச் செயலாற்ற முடியாது''

இச்சொற்கள் காமராஜரின் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்துகின்றது. மேலும் அரசாங்கத்தை நடத்தும் கட்சி திடமானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டும் என்பதையும் அவருடைய இச் சொற்கள் புலப்படுத்துகின்றன.

## சிறந்த இராஜதந்திரி

தமிழ்நாடு முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின் காமராஜர் இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த முதல் தமிழ்த் தலைவர் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் அவர்களாவர். அப்பதவியை வகித்த இரண்டாவது தமிழர் திரு. காமராஜர் அவர்கள். இவர் இப்பதவியிலிருந்த காலத்தில் நாட்டில் எதிர்பாராத நெருக்கடிகள் பல ஏற்பட்டன. நேரு அவர்கள் திடீரென இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு யாரைப் பிரதமராக ஆக்குவது என்ற பெருஞ்சிக்கல் ஏற்பட்டது. இந்நிலை நாட்டில் குழப்பம் உண்டாகிவிடுமோ என்ற அச்சம் உலகம் முழுமையிலும் இருந்தது. காமராஜர் தொடர்ந்தாற்போல் 24 மணி நேரத்திற்குமேல் எம்.பிக்களையும் மற்றும் உள்ள தலைவர்களையும் ஒருவர்பின் ஒருவராகக்கண்டு பேசி எல்லார் உள்ளத்தையும் அறிந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் லால் பகதூர் சாஸ்திரி அவர்களைப் பிரதமராகப் பதவி ஏற்கச் செய்தார். லால் பகதூர் சாஸ்திரியின் மரணத்தைத் தொடர்ந்து இந்திய அரசியலில் எவ்வித நெருக்கடியும் ஏற்படாமல் திருமதி இந்திராகாந்தி பிரதமராகப் பதவியேற்றதும் காமராஜரின் பெரு முயற்சியினாலேயே ஆகும். நெருக்கடி அரசியல் நிலையில் காமராஜர் ஆற்றிய இவ்வரிய செயல்களைக் கண்டு உலகமே வியந்தது. இந்திய அரசியல் வரலாற்றில் காமராஜரின் இப்பெருஞ் செயல்கள் என்றும் மறக்க முடியாதவை.

## தனக்கென வாழாத் தகைமை

காமராஜர் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவில்லை. இதற்குக் காரணம் தாம் தம்மை முழுமையும் நாட்டுக்கே அர்ப்பணித்து நாடு நலம் பெறப் பாடுபடவேண்டும் என்ற நன்னோக்கமாகும். அவர் காந்தி

யடிகள்கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கையும் மிகுந்த ஈடுபாடும் உடையவர். காந்தியடிகள் கொள்கைக்கேற்பவே எளிமையான முறையில் வாழ்ந்தார். பெருந்தலைவரா யிருந்தும் ஏழை எளிய மக்களிடத்து நன்கு கலந்து அளவளாவி உரையாடும் பண்புடையவர். இதனால் ஏழை மக்களுடைய இன்னல்களையும் தேவைகளையும் நன்கு உணர வாய்ப்பிருந்தது. அவர்கள் நிலை உணர்ந்து அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பல வழிகளிலும் உழைத்தார். இதனால் அவர் மாநிலம் போற்றும் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார்.

## அவர் இலட்சியம்

''நாட்டில் வறுமையையும், ஏழ்மையையும் ஒழிக்கும் வரை ஓய்வதில்லை என்று உறுதி கொள்ளவேண்டும். நமது உழைப்பால் நாட்டில் செல்வத்தைப் பெருக்க வேண்டிய நிலை இருக்கிறது. மேலும், பெருகிய செல்வம் உழைப்பாளிக்குக் கிடைக்கவேண்டும்'' இவ்வுறுதியோடு காமராஜர் இறுதிவரை பாடுபட்டார்.

## பரந்த அனுபவம்

அவருக்கு இருந்த ஆழ்ந்த அனுபவத்தாலும் அடக்கம், பொறுமை இவற்றாலும் எந்தச் சிக்கல்களையும் பதட்டமின்றித் தீர்க்கும் ஆற்றல் பெற்று விளங்கினார். அவருடைய தன்னலமற்ற தன்மையும் எத்தகையவரோடும் இனிமையாகப் பழகும் பண்பும் பலரையும் கவர்ந்தன. இதனால் பாரதப் பெரும் நாட்டின் பெருந் தலைவர்கள் முதல் சாதாரண ஏழைக் குடிமகன் ஈறாக எல்லோருடைய நன்மதிப்பையும் மரியாதையையும் மிகுதியாக அவர் பெற்றிருந்தார். ''சிக்கல்கள் நேரும்போது பரந்த அனுபவத்தினால் அவற்றை நன்முறையில் தீர்க்கும் திறனுடையவர். தம்மை ஏழைகளுக்காகவும் எளியவர்களுக்காகவும் அர்ப்பணித்துக்கொண்ட

தியாகி. அவர் பல சிக்கல்களைத் தீர்த்த திறத்திலிருந்து அவர்பால் இயல்பாக அமைந்திருந்த பண்புகளும் நம்முடைய ஜனநாயக முறையின் பலமும் நன்கு புலனுகின்றன. இவ்வாறு நம் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் **இப் பெருந்தலைவருக்குப் புகழ் அஞ்சலி** செலுத்தியிருக்கிறார்.

### நன்றிக்கடன்

இத்தகைய அரும்பெரும் தலைவரை, பண்புடைய பெருமகனை எளிமையின் உருவினை, ஏழையர்க்குப் பாடுபட்ட ஏந்தலை நம் நாடு இழந்துவிட்டது; தியாக ஒளி மறைந்துவிட்டது! ஆனால், அவரது சீரிய கொள்கைகளும் அவர் ஆற்றிய அருந் தொண்டின் பயன்களும் நம் நாட்டில் நிலைத்து நின்று அப் பெருந்தலைவரை நமக்கு என்றும் நினைவுபடுத்திக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய நன்னோக்கங்கள் நிறைவேறப் பாடுபடுவதே அவர்தம் அரும் பெரும் தியாகங்களுக்கு நம் நாடு ஆற்றும் நன்றிக்கடனாகும்.

## தனக்கென வாழாத் தகைமையர்

**திரு. ப. ஜெயராஜ்**

**முதலாண்டு, பட்ட மேற்படிப்பு — பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி**

தனக்கென வாழாமல்!
பிறர்க்கென வாழ்ந்தாய்
உன் துக்கமெல்லாம்
உனக்குள்ளே அடக்கி
உன் சுகங்களையெல்லாம் துறந்தாய்
நாட்டு நலன் கருதி!

இந்திய விடுதலைக்கு
ஈடில்லா இளமையிலே
இருட் சிறையினி லிருந்தாய்
ஈராயிரம் நாட்கள்!

பட்டி தொட்டி யெலாம்
பள்ளி பல திறந்தாய்!
பாலகர் சிலர் பசியோடு
பள்ளி வந்திடுவர் விதியாலேயென
உணவுதந்தாய் மதியந் தோறும்
திட்டமொன்று போட்டு!

நாளெல்லாம் எளிமையே உருவாய்
நாட்டு நலனே உயிராய்
நல்திட்டங்களே உணர்வாய் வாழ்ந்தாய்!

உன்னுடைய
எளிமை நடையும்
நற்சிந்தனைகளும்
எங்களிதயங்களிலும் படிந்து
எங்களை முன்னேற்றட்டும்!

கல்விக்கண் திறந்த கடமைவீரனே
உன்பிரிவால்
இந்தியத் தாய் கதறியழத்
தமிழ்மகள் சோக இசைமீட்டுகிறாள்!
எங்களுடைய கண்களிலிருந்து
கங்கைபோல் — காவிரி போல்
பாய்ந்து வரும் கண்ணீர்
உன் பாதங்களில் படுவது
உனக்குத் தெரியவில்லையா?

# மனம் கவர்ந்த மலரே!

**திரு. சோ. ஈசுவரமூர்த்தி**
**முதலாண்டு பட்ட வகுப்பு பூ. சா. கோ. கலைக் கல்லூரி**

சிங்கத் தமிழனடா! சிவகாமிச் செல்வனடா!
தங்கத் தமிழனடா! தாயன்புத் தந்தையடா!
வீரக்குடிப் பிறந்த விருதுநகர் அமிர்தமடா!
நாட்டார் மனங்கவர்ந்த நற்**காம ராஜ**ரவர்

அலறும் கடல்நடுவே அருநாடாம் கப்பலினை
பலரும் காண்கையிலே பாரழவே விட்டுவிட்டு
எங்கே சென்றிட்டான்? எங்கேயோ சென்றிட்டான்
எனதருமைத் தலைவனவன் எங்கேயோ
சென்றிட்டான்

அறிவுச் சுடரொன்று அவிந்ததுவே இன்றென்று
அவல நிலையுற்று அலமருது நாடிங்கு
அருமை மகாத்துமா அண்ணலைப் பிரிந்திட்டுத்
தனிமையில் நீயிருக்கத் தரியாமல்
சென்றனையோ?

காந்திய நெறிநின்று காலமெலாம் வழிகாட்டிக்
காந்தி கண்ட பாரதத்தைக் காணத்துடித்திட்ட
காந்தீயச் செல்வனே காந்தி ஜயந்தியன்று
காந்தியைக் காணவென்று கடுகிநீ சென்றனையோ

மனங்கவரும் மலரெனவே மக்கள் மனங்கவர்ந்தாய்
சினங்கலவா மொழிபகர்ந்து சிறப்பாக
வலம்வந்தாய்
மனங்கலங்கிச் சென்றனையோ மாண்புற்ற
தமிழ்மகனே!
இனத்தமிழர் வாழவழி எங்கிருந்தும்
காட்டுமையா.

---

பூ. சா. கோ. கலைக்கல்லூரியில் படிக்கப்பட்ட இரங்கற் பாக்களிலிருந்து எடுக்கப்பட்டது



காந்தீய நெறிநின்று
காலமெலாம் வழிகாட்டிக்
காந்திகண்ட பாரதத்தைக்
காணத் துடித்திட்ட
காந்தியச் செல்வனே
காந்தி ஜயந்தியன்று
காந்தியைக் காணவென்று
கடுகிநீ சென்றனையோ



காந்தியடிகளுடன் காமராஜ்

பாரதத் தேர்க்குப் பண்புசால் சாரதியாய், பேசாமற் பேசி பெருஞ்செயல்களைச் செய்த தீரராய், மக்கள் மனங்கவர்ந்த மாண்பாளராய், எளிமையின் உறைவிடமாய் வாழ்ந்து அமரநிலையுற்ற பெருந்தலைவர் திரு. கு. காமராஜ் அவர்களின் ஆன்ம அமைதிக்கு இறையருளை வேண்டும்,

மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், அறங்காவலர்கள்

**பி.எஸ்.ஜி. அறநிலையம்**
**பி.எஸ்.ஜி. இன்ஸ்டிட்யூட்**
**சர்வசன உயர்நிலைப் பள்ளி**
**பி.எஸ்.ஜி. தொடக்கநிலைப் பள்ளி, பூளைமேடு**
**பி.எஸ்.ஜி. தொடக்கநிலைப் பள்ளி, வேடபட்டி**
**பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி**
**பி.எஸ்.ஜி. பாலிடெக்னிக்**
**பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி**
**பி.எஸ்.ஜி. அறநிலைய பயிற்சி, ஆராய்ச்சி & முன்வடிவத்துறை**
**கலைக்கதிர்**

கலைக்கதிர் அச்சகம், கோவை 641037